மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாவட்ட சேரணிப்படைத் தலைவர்களுக்கு ஜீப் கார் தனியாக ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, போர்க்காலத்தில் உதவியாக இருக்கும் வகையில், சேரணிப்படையினருக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி அளிப்பதன்மூலம், தற்காப்புப் பயிற்சியும் அளிக்கப்படலாம் என்ற வகையில் அந்த போர் முறைகளைப் பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதுபற்றிப் பரிசீலிக்கப்படலாம்.

கொள்ளிடத்திற்கு உதவிப் பதிவாளர் அலுவலகம்

*261 வினா—திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடத்தில் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, கொள்ளிடம் பகுதி மக்கள் சீர்காழிக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. 25 மைல் தூரம் இருக்கிறது. கடினமாக இருக்கிறது. ஆகவே, கொள்ளிடத்திலேயே ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கொள்ளிடத்தில் துணைப் பதிவாளர் அலுவலகம் வைப்பதுகுறித்து நாகப்பட்டிணம் பதிவாளர்மூலம் பரிசிலனை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கொள்ளிடத்திற்கும் சீர்காழிக்கும் அதிக தூரம் இல்லை என்பதாலும், துரித பஸ்கள் போவதாலும், அங்கே ஒரு அலுவலகம் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது.

பர்கூர் மலைவாழ் மக்கள்

*262 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பவானி வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் உள்ள மலைஜாதி மக்களின் தொகை என்ன ?

(இ) இவர்கள் சேலம், திருச்சி, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் உள்ளது போல மலைஜாதி மக்களாகக் கருதப்பட்டுச் சலுகைகள் பெறுகிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) சுமார் 1,000.

(இ) இல்லை.